**2025 ஆகஸ்ட்  மாதம் 13 – ஆம் தேதி புதன்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**எம் .சி .ஓ .பி. நெம்பர்     :  212 /2019**

| | | | |
|---|---|---|---|
| MCOP No.:  212/2019 | – பூங்கொடி | PW1 | 13.08.2025 |

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டு, 3ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் தாக்கல்  செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை எனது வழக்கறிஞரிடம் நான் தான் சொன்னேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு நன்றாக தெரியும். விபத்து நடந்த தேதி 19ம் தேதி மாதம், வருடம் ஞாபகமில்லை. விபத்து இரவு 7.30 மணிக்கு நடந்தது. விபத்து கோட்டூர் – தர்மபுரி செல்லும் சாலையில் நடந்தது. விபத்து நடந்த சமயத்தில் நாங்கள் வேலைக்கு சென்றுவிட்டு மாலை 7.30 மணிக்கு நாங்கள் ஆட்டோவில் வந்தோம், எனது கணவர் ஆண்டவர் பைக்கில் வந்தார். விபத்து நடந்ததை நான் நேரில் பார்த்தேன். விபத்து நடந்த இடத்திற்கும் நான் பயணம் செய்த ஆட்டோவிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சிறிது தூரம் மட்டுமே இருக்கும். விபத்து சமயத்தில் எனது கணவர் தலைகவசம் அணிந்திருந்தார். விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் மனுவை எனது கொழுந்தன் மகன் முத்துராஜா என்பவர் எழுதிக்கொடுத்தார். முதல் தகவல்  அறிக்கையை நான் படித்துப் பார்த்துள்ளேன். விபத்து சமயத்தில் முத்துராஜா ஊரில் இருந்தார், நாங்கள் அழைத்து ஆம்புலன்ஸில் ஏற்றும்போது அவர் வந்துவிட்டார். நான் சொல்வது முற்றிலும் தவறு என்றும், விபத்து நடந்த சமயத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், வேறு மூன்றாவது நபர் சொல்லி முத்துராஜாவிற்கு தகவல்

தெரிந்ததாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் காளிமுத்து மகன் சென்றாயன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புகார் மனுவில் காளிமுத்து மகன் சென்றாயன் என்பவர் விபத்து நடந்ததை பார்த்து, முத்துராஜா என்பவருக்கு தகவல் சொல்லி முத்துராஜா என்பவர் புகார் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அடிப்பட்டவுடன் எனது கணவரை ஆட்டோவில் ஏற்றி கோட்டூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதலுதவு சிகிச்சை பெற்றுவிட்டு, பின்னர் சின்னமனூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். விபத்து சமயத்தில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எங்கள் ஊருக்கு போலீசார் வந்து, எனது வீட்டில் வைத்து விசாரித்தார்கள். விசாரிக்கும்போது போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. விபத்திற்கும் நடந்த சம்பத்திற்கும் முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது கணவர் சென்ட்ரிங்க் வேலை செய்து கொண்டிருந்தார். விபத்து சமயத்தில் எனது கணவர் வேலை செய்ததை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் வேலை செய்த முதலாளியை அழைத்து விசாரிக்க நான் தயாராக உள்ளேன். எனது கணவர் சென்ட்ரிங்க் வேலை செய்ததாக சொல்லியுள்ள நிலையில், கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினராக சேர்ந்துள்ளாரா என்றால் இல்லை. எனது மகன் கோயம்புத்தூரில் ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறார். எனது மகன் சவூதி அரேபியாவில் வேலை பார்த்து வருகிறார் என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது கணவர் வேலைக்கு போகவில்லை

என்றும், எனது மகன் சவூதி அரேபியாவில் வேலை பார்த்து அனுப்பும் பணத்தை வைத்து நாங்கள் குடும்பம் நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய TN 58 AB 4224 என்ற இருச்சக்கர வாகனத்தை ஓட்டிய நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ஓட்டுநர் உரிமம் இருந்திருந்தால் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்று சொன்னால் அவசரத்தில் ஓட்டுநர் உரிமத்தை பார்க்கவில்லை. விபத்து சமயத்தில் எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம் நடைமுறையில் இருந்தது. எனது கணவரின் ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது கணவர் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் எனது கணவர் விபத்தை ஏற்படுத்திய காரணத்தினால் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டதல்ல என்று சொன்னால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கோரியுள்ள இழப்பீடு எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 13.08.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.08.13 18:04:27 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி(FAC). தேனி.
13.08.2025